***கவனிக்க.-*** *27.07.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1770 - 2012 අගෝස්තු මස 03 වැනි සිකුරාදා - 2012.08.03

*1770 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1190 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, ஓகத்து மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, ஓகத்து மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.

# மாகாண சபை அறிவித்தல்கள்

## வடமேல் மாகாணத்தின் மாகாண சபை

வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2012 ஆம் ஆண்டின் ..................... ஆம் இலக்க வடமேல் மாகாண மக்கள் சனசமூக கூட்டமைப்பு (நீர் வழங்கல் மற்றும் சுற்றுச் சூழல் ஆரோக்கியம்) ஒழுங்குபடுத்தும் கொள்கைப் பிரகடனம்

இங்கு கீழே பிரசுரிக்கப்படும் வடமேல் மாகாணத்தின் 2012 ஆம் ஆண்டின் ........... ஆம் இலக்க வடமேல் மாகாண மக்கள் சனசமூக கூட்டமைப்பு (நீர் வழங்கல் மற்றும் சுற்றுச்சூழல் ஆரோக்கியம்) ஒழுங்குபடுத்தும் கொள்கைப் பிரகடனம் இன்றிலிருந்து முப்பது நாட்கள் கடந்த பின்னர் வடமேல் மாகாணத்தின் மாகாண சபைக்கு, சமர்ப்பிப்பது பற்றி இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன். எவருக்காவது இக்கொள்கைப் பிரகடனத்தில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் தொடர்பாக சமர்ப்பிப்பதற்கு ஏதாவது கருத்துக்கள் இருந்தால் அவற்றை அத்தினத்துக்கு முன்னர் எனக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(சட்டத்தரணி) அதுல சரத் குமார விஜேசிங்க,
முதலமைச்சரும் நிதி, திட்டமிடல்,
சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சியும் மாகாண
நிருவாகமும், மனித வள, கல்வியும், கலாசார நடவடிக்கையும், காணி,
போக்குவரத்து, சூழல், சுற்றுலா, முதலீட்டு நடவடிக்கை, கூட்டுறவு,
அபிவிருத்தியும் உணவு வழங்கலும் அத்துடன் விநியோக அமைச்சரும்,
வடமேல் மாகாண மாகாண சபை.

முதலமைச்சர் அலுவலகம்,
''மாகாண சபை அலுவலக கட்டிடத்தொகுதி'',
குருநாகல்,
2012, யூன் 6.

## வடமேல் மாகாணத்தின் மாகாண சபை

### 2012ஆம் ஆண்டின் .............. ஆம் இலக்கம் சமூகநல அமைப்பை (நீர் வழங்கல், சுற்றாடற் பொதுச் சுகாதாரத்தை) ஒழுங்குபடுத்துவதற்கான கொள்கைப் பிரகடனம்

வடமேல் மாகாணத்தினுள் நிலையான நீர் வழங்கல், சுற்றாடற் பொதுச்சுகாதார செயற்றிட்டங்களை ஆரம்பித்தல், கொண்டு நடாத்தல், நிர்வகித்தல் போன்றவற்றிற்காக சமூகநல அமைப்புக்களை ஆரம்பித்தல், வழிநடாத்தல், ஒழுங்குபடுத்தல் போன்றவற்றிற்காக உள்ளூராட்சி அமைச்சின் கீழ் அலகொன்றை ஆரம்பித்தல், அதனுடன் தொடர்புபட்ட அல்லது இடைநேர்விளைவான விதிமுறைகளை விதிப்பதற்கான கொள்கைப் பிரகடனமாகும்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வடமேல் மாகாணத்தின் மாகாண சபையினால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.

வடமேல் மாகாணத்தினுள் நிலையான நீர் வழங்கல், சுற்றாடற் பொதுச்சுகாதார செயற்றிட்டங்களை ஆரம்பித்தல், கொண்டு நடாத்தல், நிர்வகித்தல் போன்றவற்றிற்காக சமூகநல அமைப்புக்களை ஆரம்பித்தல், வழிநடாத்தல், ஒழுங்குபடுத்தல் போன்றவற்றிற்காக உள்ளூராட்சி அமைச்சின் கீழ் அலகொன்றை ஆரம்பித்தல், அதனுடன் தொடர்புபட்ட அல்லது இடைநேர் விளைவான விதிமுறைகளை விதிப்பதற்கான கொள்கைப் பிரகடனமாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடமேல் மாகாணத்தின் மாகாண சபையினால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.

குறுகிய பெயரும் செயற்படும் திகதியும்.

1. இக்கொள்கைப் பிரகடனம் 2012 ............ ஆம் இலக்க ''வடமேல் மாகாணத்தின் சமூகநல அமைப்புக்களை ஆரம்பித்தல், ஒழுங்குபடுத்தலுக்கான கொள்கைப் பிரகடனம்'' என அழைக்கப்படுவதுடன், வடமேல் மாகாணத்தின் ஆளுநரினால் அனுமதி அளிக்கப்பட்ட தினத்திலிருந்து இது செல்லுபடியாகும்.

### 1 ஆம் பாகம்

### சமூக நல அமைப்புக்களை ஆரம்பித்தல், வழிநடாத்தல், ஒழுங்குபடுத்தல் போன்றவற்றிற்காக அலகொன்றை ஆரம்பித்தல் மற்றும் அதன் அமைப்பும் நிர்வாகமும்

மாகாண அலகை நிறுவுதல்.

2. இக்கொள்கைப் பிரகடனத்தைச் செயற்படுத்தும் பணிக்காகவும் அதன் கீழ் ஆரம்பிக்கப்படும் மாகாணக் கமிட்டியின் நோக்கம் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கும் தேவையான மாகாண நீர் மற்றும் சுற்றாடற் பொதுச்சுகாதார அலகு இதன் பின்னர் ''மாகாண அலகு'' என அழைக்கப்படும் உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் அலுவலகத்தில் ஆரம்பிக்கப்படும்.

3. (i) மாகாண அலகின் பணிப்பாளராக குழு நிலைத்தர உத்தியோகத்தர் ஒருவர் அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட ேண்டும். மாகாண அலகின் அமைப்பு.

(ii) மாகாண அலகில் கடமையாற்றத் தேவையான ஊழியர் குழு உதவியை வடமேல் மாகாணத்தில் அரச சேவையில் ஈடுபட்டுள்ள ஏதாவது பதவி வகிக்கும் ஒருவருக்கு கடமையை ஒப்படைத்தல் மூலம் பெற்றுக்கொள்ள மாகாண பிரதம செயலாளருக்கு கட்டளை ஒன்றின் மூலம் விதிமுறைகளை வகுக்கலாம்.

4. மாகாண அலகில் நிறைவேற்றப்படும் சகல கருமங்கள், பணிகள் தொடர்பிலான நிர்வாகம் மாகாணத்தின் பிரதம செயலாளரின் கட்டளைக்கிணங்க உள்ளூராட்சிச் செயலாளருக்கு வழங்கப்படும். மாகாண அலகின் நிர்வாகம்.

5. மேலே 03 ஆம் சரத்தின் கீழ் தமது நிலையான பதவிக்கு மேலதிகமாக மாகாண அலகில் கடமை பொறுப்புச் சாட்டப்பட்ட அதிகாரி ஒருவருக்கு அவ்வாறு கடமை பொறுப்புச் சாட்டப்பட்டதன் பேரில் தனது நிலையான பதவிக்குரிய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக ஊதியமோ கொடுப்பனவோ வழங்கப்படலாம். மாகாண அலகின் சம்பளமும் கொடுப்பனவுகளும்.

## II ஆம் பாகம்

### சமூக நல அமைப்புக்களின் பதிவும் மேற்பார்வையும்

6. (1) இக்கொள்கைப் பிரகடனம் செயற்படும் தினத்திற்கு மாகாணத்தினுள் நீர் வழங்கல், சுற்றாடற் பொதுச் சுகாதாரத்திற்குரிய செயற்றிட்டங்களைச் செயற்படுத்தும், நிர்வகிக்கும் அல்லது அச்செயற்றிட்டத்தின் செயற்பாடுகளுடன் தொடர்புடைய ஏதாவதொரு செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள அனைத்து சமூக நல அமைப்புக்களும் இக்கொள்கைப் பிரகடனம் அனுமதிக்கப்பட்டு 3 மாதங்கள் கடந்து செல்வதற்கு முன் மாகாண அலகின் பிரதானிக்கு முறையான விண்ணப்பம் ஒன்றினை முன்வைத்து பதிவு செய்து கொள்ள வேண்டும். சமூக நல அமைப்புக்களின் பதிவு.

(2) இக்கொள்கைப் பிரகடனம் செயற்படுத்தப்படும் தினத்தின் பின்னர் திட்டமிட்டு ஆரம்பிக்கப்படும் நீர் வழங்கல் அல்லது சுற்றாடற் சுகாதாரத்திற்குரிய யாதேனுமொரு செயற்றிட்டம் பற்றி எந்தவொரு அலுவல்களுடன் தொடர்புடைய எல்லா சமூக நல அமைப்புகளும் அவ்வாறு தொடர்புகொள்ள 14 நாட்களுக்கு முன்னர் மாகாண அலகின் தலைவருக்கு பதிவதற்காக விண்ணப்பம் ஒன்றினை சமர்பித்தல் வேண்டும்.

(3) மேலே (1) மற்றும் (2) ஆம் உப சரத்துக்களில் முன்வைக்கப்படும் விண்ணப்பத்திற்கமைய 3 மாத காலத்தினுள் சமூக நல அமைப்பைப் பதிவு செய்வதற்கு அல்லது காரணங் காட்டி நிராகரிப்பதற்கு மாகாண அலகின் பிரதானி வகை செய்ய வேண்டும்.

7. (1) அவ்வாறு பதிவு செய்து கொண்டதன் பின் அவ்வனைத்து சமூக நல அமைப்புக்களும் நீர் வழங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மாகாண அலகிடமிருந்து வருடாந்த அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். வருடாந்த அனுமதிப்பத்திரம்.

(2) அதற்கான முறையான விண்ணப்பப் படிவத்தை மாகாண அலகின் பிரதானியிடம் கையளிக்க வேண்டும். அத்துடன், விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்கும் வேளையில் அல்லது அதன் பின்னர் மாகாண அலகின் பிரதானிக்குத் தேவையேற்படின் உரிய நீர் மூலத்திலிருந்து பக்டீரியா, இரசாயனத் தன்மை தொடர்பான பரிசோதனை அறிக்கை ஒன்று, சமூக நல அமைப்பின் வருடாந்த கணக்காய்வு அறிக்கை, தேவையான ஏனைய ஆவணங்களை முன்வைக்குமாறு பணிக்க முடியும்.

(3) இவ்வறிக்கையையும் அதனோடு தொடர்புடைய ஏனைய விடயங்களையும் கருத்திற் கொண்டு மாகாண அலகின் பிரதானியினால் வருடாந்த அனுமதிப்பத்திரத்தை வழங்கவோ மறுக்கவோ முடியும்.

(4) வருடாந்த அனுமதிப் பத்திரம் வழங்கப்படவில்லையாயின் உரிய அறிக்கையுடன் சரியான முறையில் விண்ணப்பப் படிவம் முன்வைக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு மாத காலத்தினுள் விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்பட்டமை மாகாண அலகின் பிரதானியினால் உரிய சமூக நல அமைப்பிற்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

(5) அவ்வாறு நிராகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் தொடர்பில் நிரகாரிக்கப்பட்ட தினத்திலிருந்து இரண்டு வார காலத்தினுள் செயலாளரினால் மேன்முறையீடு செய்யலாம். அவ்வாறான மேன்முறையீடு தொடர்பில் செயலாளருக்குப் பொருத்தமான தீர்மானம் எடுக்கலாம்.

(6) வருடாந்த அனுமதிப் பத்திரம் இன்றி நீர் வழங்கல் செயற்றிட்டங்களில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளும் சமூக நல அமைப்புக்கள் இக்கொள்கைப் பிரகடனத்தின் 5 ஆவது சரத்தின் பிரகாரம் கருமமாற்ற வேண்டும்.

சமூக நல அமைப்பு மேற்பார்வை.

8. மேலே 6 ஆவது சரத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட சமூக நல அமைப்புக்களின் நடவடிக்கைகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை மேற்பார்வை செய்தல், விமர்சித்தல், அறிவுரை வழங்குதல் தொடர்பான அதிகாரம் மாகாண அலகிற்கு அல்லது அலகின் வழிகாட்டல், அறிவுரைகளின் பிரகாரம் அச்சமூக நல அமைப்பு அமைந்துள்ள உள்ளூராட்சிமன்றத்திற்குரியது.

அமைச்சருக்குரிய அதிகாரங்கள்.

9. (1) மேலே 6 ஆவது சரத்தின் பிரகாரம் பதிவுசெய்து கொண்ட சமூக நல அமைப்புக்களின் நடவடிக்கைகள், பணிகள் தொடர்பான வழிகாட்டல், அறிவுரை வழங்க மாகாண சபையில் உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சருக்கு அதிகாரமுண்டு.

(2) அமைச்சரினால் அவ்வாறு வழங்கப்படும் அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் அலகின் பிரதானியினால் உரிய சமூக நல அமைப்பிற்குத் தெரியப்படுத்த வேண்டும்.

(3) அவ்வாறு வழங்கப்படும் அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் உரிய சமூக நல அமைப்பு ஏற்றுக்கொள்ளவில்லையாயின் அல்லது மீறப்படுமாயின் விடயப் பொறுப்பு அமைச்சரினால் ஆய்வு அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டு அவ்வாய்வு அதிகாரியின் விதப்புரையின் பிரகாரம் செயற்பட அமைச்சின் செயலாளரின் பால் அனுப்ப அதிகாரமுண்டு.

(4) இக்கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அமைச்சருக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் கட்டளைகளைப் பிறப்பிக்க முடியும்.

(5) மாகாணக் குழுவினதும் பிரதேசக் குழுவினதும் நடவடிக்கைகள் தொடர்பில் அமைச்சரினால் பொதுவான அல்லது விஷேட விதிமுறைகளைப் பிறப்பிக்க முடியும்.

(6) மாகாணக் குழுவின் தனிப்பட்ட அதிகாரங்கள், நடவடிக்கைகள் போன்றவற்றைச் செயற்படுத்துகையில் தேவைக்கேற்றவாறு காலத்துக்குக் காலம் வழிகாட்டுதல்களையும், அறிவுரைகளையும் அமைச்சரினால் வழங்க முடியும்.

சமூக நல அமைப்புக்கள் பதிவு செய்யப்படாமை.

10. (1) மேலே 6 ஆவது சரத்தின் விதிமுறைகளின் பிரகாரம் பதிவுசெய்யப்படாத அல்லது 7 ஆவது சரத்தின் பிரகாரம் வருடாந்த அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளாத சமூக நல அமைப்புக்களின் மூலம் வழிநடாத்தப்படுகின்ற அல்லது நிர்வகிக்கப்படுகின்ற மாகாணத்தினுள் அமைந்துள்ள நீர் வழங்கல், சுற்றாடற் பொதுச் சுகாதாரச் செயற்றிட்டங்களின் சகல சொத்துக்களும், பொறுப்புக்களும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் பூரண அனுமதியுடன் அச்செயற்றிட்டம் செயற்படுத்தப்படுகின்ற பிரதேசம் உரித்துடைய உள்ளூராட்சிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட வேண்டும்.

(2) அவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட செயற்றிட்டமானது உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் உறுதி செய்யப்பட்டவாறு, பறிமுதல் செய்யப்பட்ட உள்ளூராட்சிமன்றத்தினால் வழிநடாத்தப்படுதல், நிர்வகித்தல் அல்லது செயலாளரினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு புனர்நிர்மாணம் செய்யப்பட்ட சமூக நல அமைப்பொன்றிற்கு வழங்க முடியும்.

## III ஆம் பகுதி

### நீர் வழங்கல், சுற்றாடற் பொதுச் சுகாதாரம் தொடர்பான மாகாணக் குழுவொன்றினை நிறுவுதல், அமைப்பு மற்றும் அதன் நடவடிக்கைகள்

*மாகாண குழு.*

11. விடயப் பொறுப்பான அமைச்சரினால் நீர் வழங்கல், சுற்றாடற் பொதுச் சுகாதாரம் தொடர்பாக இதன் பின்னர் "மாகாணக் குழு" எனும் பெயரில் மாகாண ஒருங்கிணைப்புக் குழுவொன்று நிறுவப்பட வேண்டும்.

*மாகாண குழுவின் அமைப்பு.*

12. மாகாண குழு கீழுள்ள உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் :-

(அ) மாகாண சபையின் பிரதம செயலாளர் குழுவின் தலைவராவார்.

(ஆ) மாகாண அலகின் பிரதானி குழுவின் செயலாளராவார்.

(இ) உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர்.

(ஈ) உள்ளூராட்சி ஆணையாளர் நாயகம்.

(உ) மாவட்ட செயலாளரின் பிரதிநிதி ஒருவர்.

(ஊ) மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர்.

(எ) மாகாண பொறியியல் சேவைப் பிரதிப் பிரதான செயலாளர்.

(ஏ) தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொது முகாமையாளர்.

(ஐ) மாகாண சபையின் சுகாதாரச் சேவைப் பணிப்பாளர்.

(ஒ) மாகாண சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர்.

(ஓ) குடிநீர் வழங்கல், பொதுச் சுகாதார செயற்றிட்டங்களைச் செயற்படுத்தும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள்.

(ஔ) சமூக நல அமைப்புக்களின் மாகாண அமைப்பின் தலைவர்.

(க) தற்போது அமுலில் உள்ள அல்லது இதன் பின்னர் மாகாணத்தினுள் நன்கொடைகளின் கீழ் செயற்படுத்தப்படவுள்ள குடிநீர் வழங்கல், பொதுச் சுகாதாரச் செயற்றிட்டங்களின் பிரதானிகள்.

(கா) மாகாண வீதித் திணைக்களம், பெருந்தெருக்கள் திணைக்களத்தின் பணிப்பாளர்கள்.

13. மாகாண குழுவின் பணிகள் கீழுள்ளவாறு அமையும் :- மாகாண குழுவின் பணிகள்.

(அ) நீர் வழங்கல், சுற்றாடற் பொதுச் சுகாதாரத்திற்குரிய கொள்கைகள், வேலைத்திட்டங்களைத் திட்டமிடல் ;

(ஆ) மாகாணத்தினுள் நீர் வழங்கல், சுற்றாடற் தேவைகளைத் தீர்மானித்தல் ;

(இ) அலகு முன்வைக்கும் அபிவிருத்தித் திட்டங்களை அனுமதித்தல் ;

(ஈ) நடைமுறையில் உள்ள நீர் வழங்கல், சுற்றாடற் பொதுச் சுகாதாரச் செயற்றிட்டங்களுக்கு வழிகாட்டல் மற்றும் பராமரிப்புச் செயற்பாடுகளைத் தீர்மானித்தல் ;

(உ) நீர் வழங்கல், பொதுச் சுகாதார நடவடிக்கைகளுடன் தொடர்பான செயற்றிட்ட முன்மொழிகளுக்கு நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல் மற்றும் விதப்புரைகளை விடய அமைச்சருக்கு முன்வைத்தல் ;

(ஊ) நீர் வழங்கல், சுற்றாடற் பொதுச் சுகாதார நடவடிக்கைகள் தொடர்பில் அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் துறை உதவித் தொகுதிகளிலிருந்து உதவியைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

14. (1) மாகாண குழுவின் கீழ் இயங்கும் உறுப்பினர்கள் இரு மாதங்களுக்கு ஒரு முறை ஒன்று கூட வேண்டும். தேவையேற்படின் தலைவரின் அறிவுரையின் பேரில் செயலாளரினால் மேலதிக ஒரு கூட்டம் கூட்ட முடியும். மாகாணக் குழுவின் ஒன்று கூடல்.

(2) மாகாணக் குழுவின் ஒன்று கூடலின்போது குறைந்தது பத்து உறுப்பினர்களாவது பங்குபற்ற வேண்டும்.

## IV ஆம் பகுதி

### நீர் வழங்கல், சுற்றாடற் பொதுச் சுகாதாரம் தொடர்பாக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவொன்றை ஆரம்பித்தல், அதன் அமைப்பு மற்றும் அதன் பணிகளும் அதிகாரங்களும்.

15. நீர் வழங்கல், சுற்றாடற் சுகாதாரம் தொடர்பில் இதன் பின்னர் "பிரதேசக் குழு" எனும் பெயரில் அழைக்கப்படும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு ஒன்று உள்ளூராட்சிமன்ற அதிகாரப் பிரதேசத்தினுள் நிறுவப்பட வேண்டும். பிரதேச குழு.

16. உள்ளூராட்சிமன்ற அதிகாரப் பிரதேசத்தினுள் வசிக்கும் பொது மக்களின் சுகவாழ்விற்குத் தேவையான குடிநீர் வழங்கல், சுற்றாடற் சுகாதாரச் செயற்றிட்டங்களின் நிலையான தன்மையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான கொள்கை ரீதியான மற்றும் நிர்வாகத் தீர்மானங்களை எடுப்பதற்கும் மாகாணக் குழுவின் நோக்கங்களைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும் பங்களித்தல் பிரதேசக்குழுவின் நோக்கமாகும். பிரதேச குழுவின் நோக்கம்.

17. பிரதேசக் குழு கீழுள்ள அங்கத்தவர்களைக் கொண்டிருக்க வேண்டும் :- பிரதேச குழுவின் அமைப்பு.

(அ) உள்ளூராட்சிமன்றத் தலைவர் பிரதேசக் குழுவின் தலைவராவார் ;

(ஆ) உரிய உள்ளூராட்சி மன்றத்தின் நீர் வழங்கல், பொதுச் சுகாதாரத்திற்குப் பொறுப்பான அதிகாரி பிரதேசக் குழுவின் செயலாளராவார் ;

(இ) பிரதேசத்தின் பிரதேச செயலாளர் அல்லது அவரின் பிரதிநிதி ஒருவர் ;

(ஈ) உள்ளூராட்சி மன்றத்தின் செயலாளர் ;

(உ) பிரதேசத்தின் பிரதேசச் சுகாதார அதிகாரி அல்லது அவரது பிரதிநிதி ;

(ஊ) தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொது முகாமையாளரினால் பெயர் குறிப்பிடப்பட்ட அச்சபையின் அதிகாரி ஒருவர்.

(எ) சமூக நல அமைப்பாளர்கள் பிரதேச அமைப்பின் தலைவரும் செயலாளரும் ஆகும்.

(ஏ) கமநல சேவைப் பிரதேச அலுவலர்.

பிரதேச குழுவின் பணிகள்.

18. உள்ளூராட்சி மன்ற அதிகாரப் பிரதேசத்தினுள்.-

(அ) குடிநீர் வழங்கல், சுற்றாடற் பொதுச் சுகாதாரத் தேவைகள், பிரச்சினைகளை இனங்கண்டு மாகாணக் குழுவிற்கு முன்வைத்தல் ;

(ஆ) நடமுறையில் உள்ள நீர் மற்றும் சுற்றாடற் பொதுச் சுகாதாரச் செயற்றிட்டங்களின் நடப்பு மற்றும் முன்னேற்றம் குறித்த மேற்பார்வை ;

(இ) சமூக நல அமைப்புக்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல், வழி நடாத்தல் ;

(ஈ) சமூக நல அமைப்புக்களிடையே உள்ளக ஒருங்கிணைப்பு ;

(உ) மாகாண அலகினால் செய்ய வேண்டும் என விதிக்கப்படும் நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.

பிரதேச குழுவின் அதிகாரங்கள்.

19. (1) மேலே 18 ஆம் சரத்தில் குறிப்பிடப்பட்ட செய்பாடுகளை நிறைவேற்றுவதற்கு பிரதேச குழுவிற்கு அதிகாரமுண்டு.

(2) மாகாண குழுவினால் அலகின் பிரதானி மூலம் விதிக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அதிகாரமுண்டு.

(3) பிரதேச குழுவினால் அதன் தனிப்பட்ட அதிகாரங்களையும், பணிகளையும் செயற்படுத்துகையில் மாகாண குழுவினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படுகின்ற பொதுவான அல்லது விஷேட விதிமுறைகளையும், அறிவுரைகளையும் பின்பற்றிச் செயற்பட வேண்டும்.

பிரதேச குழுவின் ஒன்றுகூடல்.

20. (1) பிரதேச குழுவின் கீழ் இயங்குகின்ற ஊழியர்கள் இரு மாதத்திற்கு ஒரு தடவை ஒன்று கூட வேண்டும். அத்துடன் தேவையேற்படின், தலைவரின் பணிப்புரையின் பேரில் செயலாளர் மேலதிக ஒன்று கூடல்களை ஏற்பாடு செய்யலாம்.

(2) பிரதேச குழுவின் ஒன்று கூடலின் போது குறைந்தது உறுப்பினர் தொகையில் மூன்றில் ஒரு பேர் கலந்து கொள்ள வேண்டும்.

(3) பிரதேச குழுவினால் அவ்வொன்று கூடல்களின் நடவடிக்கைகள், பணிகள் போன்றவற்றை முன்னெடுப்பதற்குத் தேவையான நிலையியற் கட்டளைகளை வகுத்துக் கொள்ளலாம்.

## *V* ஆம் பகுதி

### பிரதேச குடிநீர், சுற்றாடற் பொதுச் சுகாதார அலகினை நிறுவுதல்

பிரதேச குடிநீர், பொதுச் சுகாதார அலகு.

21. இக்கொள்கைத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்படுகின்ற பிரதேச குழுவின் நோக்கம் மற்றும் நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளுவதற்குத் தேவையான பிரதேசக் குடிநீர், சுற்றாடற் பொதுச் சுகாதார அலகை (இதன் பின்னர் "பிரதேச அலகு" என அழைக்கப்படுகின்ற) மாகாணத்தினுள் அமைந்துள்ள உள்ளூராட்சி மன்ற அலுவலகத்தில் ஆரம்பிக்க முடியும்.

பிரதேச அலகின் ஊழியர் குழு.

22. 21 ஆவது சரத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட பிரதேச அலகில் கடமையாற்றுவதற்குத் தேவையான ஊழியர் குழுவினை பிரதேச உள்ளூராட்சி மன்றத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஏதாவதொரு பதவியை வகிக்கும் ஒருவருக்கும் வழங்குவதன்மூலம் பெற்றுக்கொள்ள கட்டளை பிறப்பித்து விதிமுறைகளை வகுக்க உள்ளூராட்சி ஆணையாளரினால் முடியும்.

பிரதேச அலகின் நிர்வாகம்.

23. பிரதேச அலகினால் நிகழ்த்தப்படும் சகல நடவடிக்கைகள் மற்றும் அதன் பணிகள் குறித்த நிர்வாகம் உள்ளூராட்சி ஆணையாளருக்கும், அலகின் முகாமையாளரின் வழிகாட்டலின் கீழ் உள்ளூராட்சி மன்றப் பிரதானிக்கும் உரியது.

பிரதேச அலகின் சம்பளமும் கொடுப்பனவுகளும்.

24. 22 ஆவது சரத்தின் பிரகாரம் நிலையான பதவிக்கு மேலதிகமாக பிரதேச அலகில் கடமையாற்றும் அதிகாரி ஒருவருக்கு அவ்வாறு கடமை பொறுப்புச் சாட்டப்பட்டதன் பேரில் தமது நிலையான பதவிக்கு வழங்கப்படும் சம்பளம், கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக சம்பளமோ அல்லது கொடுப்பனவோ வழங்கலாம்.

### *VI* ஆம் பகுதி

### நிதி ஒதுக்கீடு

25. இக்கொள்கைப் பிரகடனத்தைச் செயற்படுத்தத் தேவையான நிதி ஒதுக்கீடு. நிதி ஒதுக்கீடு.

(அ) மாகாண சபையின் வருடாந்த வருமான செலவின அறிக்கை மற்றும் வரவு செலவு மதிப்பீட்டிலிருந்து.

(ஆ) உள்ளூராட்சி மன்றங்களின் வருடாந்த வரவு செலவிலிருந்து.

(இ) அரச சார்பற்ற அல்லது தனியார் அல்லது பிற நிதி மூலங்களிலிருந்து.

(ஈ) செயற்றிடத்திற்காக வழங்கும் நிதியினை நிதி ஒதுக்கீடுகள் மூலம் நிர்ணயித்து வழங்க முடியும்.

26. இக்கொள்கைப் பிரகடனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள பதங்கள் தொடர்பில் மேலதிக விளக்கம் தேவைப்படின்.-

(அ) ''அமைச்சர்'' எனும் பதத்தினால் வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சரும்,

(ஆ) ''பிரதம செயலாளர்'' எனும் பதத்தினால் வடமேல் மாகாணத்தின் பிரதம செயலாளரும்,

(இ) ''செயலாளர்'' எனும் பதத்தினால் உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரும்,

(ஈ) ''தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை'' எனும் பதத்தினால் 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சட்டமூலத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையும்.

(உ) ''சமூக நல அமைப்பு'' எனும் பதத்தினால் நீர் வழங்கல், சுற்றாடற் பொதுச் சுகாதார சேவை வழங்குதல் மற்றும் நிர்வாகத்திற்காக சேவை பெறுநர்களைப் பிரதிநிதியாகக் கொண்டு நிறுவப்பட்டுள்ள, உரிய சட்டத்தினால் அல்லது இக்கொள்கைப் பிரகடனத்தினால் பதிவு செய்யப்பட்டுள்ள அமைப்பும்.

(ஊ) ''சமூக நல அமைப்பின் மாவட்ட அமைப்பு'' என்பதனால் மாவட்டத்தினுள் அமைந்துள்ள சகல சமூக நல அமைப்புக்களும் பிரதேச அமைப்புக்களின் பங்களிப்புடன் அவ்வமைப்பினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள அமைப்பும்.

(எ) ''நீர் வழங்கல்'' எனும் பதத்தினால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டமூலத்தின் 117 ஆவது சரத்தினால் வீட்டுத் தேவைக்கான நீருக்குக் கொடுக்கப்பட்டுள்ள வரைவிலக்கணமும்.

(ஏ) ''சுற்றாடற் பொதுச் சுகாதாரம்'' என்பதனால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டமூலத்தின் நான்காவது பகுதியில் பொதுமக்கள் சுகாதாரத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள வரைவிலக்கணமும்.

(ஐ) ''மாகாண சபை'' என்பதனால் வடமேல் மாகாணத்தின் மாகாண சபையும்.

(ஒ) ''மாகாண அலகு'' என்பதனால் வடமேல் மாகாண குடிநீர், சுற்றாடற் பொதுச் சுகாதார அலகும் அர்த்தப்படுத்தப்படுகின்றது.

இக்கொள்கைப் பிரகடனத்தில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை தோன்றுமாயின், சிங்கள மொழியில் குறிப்பிடப்பட்டுள்ளதே ஏற்றுக்கொள்ளப்படும்.

8-179

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

*1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.*

*2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன்* ***அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8*** *அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.*

*3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.*

*4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.*

***5. சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.*** *தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.*

***6. நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்*** *பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

***7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.***

*8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.*

*10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-*

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

*ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.*

*11.* ***வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி*** *வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

***12. ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.***

***13. 2010 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-***

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

***முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.***

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

***இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.***

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.*** *– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

**அட்டவணை - 2012**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஓகத்து** | .. | வெள்ளி | 03.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.07.2012 |
| | | வெள்ளி | 10.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.07.2012 |
| | | வெள்ளி | 17.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.08.2012 |
| | | வெள்ளி | 24.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.08.2012 |
| | | வியாழன் | 30.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.08.2012 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 07.09.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.08.2012 |
| | | வெள்ளி | 14.09.2012 | .. | நண்பகல் 12 | வியாழன் | 30.08.2012 |
| | | வெள்ளி | 21.09.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.09.2012 |
| | | வெள்ளி | 28.09.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.09.2012 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 05.10.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.09.2012 |
| | | வெள்ளி | 12.10.2012 | .. | நண்பகல் 12 | வியாழன் | 28.09.2012 |
| | | வெள்ளி | 19.10.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.10.2012 |
| | | வியாழன் | 25.10.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.10.2012 |

**பி. கே. எஸ். ரவீந்திர,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.